# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

அனுமதி

மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,
தலைவர், தமிழக ஆயர் பேரவையின்
திருவழிபாட்டுப் பணிக்குழு

தயாரிப்பு

அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்
பொதுச்செயலர்
தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு
முப்பணி மையம், திண்டிவனம்

2020

# ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

**(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)**

## முன்னுரை

இது பாஸ்கா விழா கொண்டாடும் காலம். எருசலேம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் எருசலேம் தேவாலயம் நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு யூத ஆணும் இவ்விழாவிற்கு வரவேண்டும், இது யூதச் சட்டம். பாலஸ்தீன யூதர் மட்டுமல்ல, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் யூதர்கள், தங்கள் தேசிய திருவிழாவைக் (National Festival) கொண்டாட கூடினார்கள். பல்வேறு எதிர்பார்ப்புகளோடு மக்கள் கூடிக்கொண்டிருக்க, இயேசுவும் எருசலேமிற்கு பயணிக்கிறார்.

ஆண்டாண்டுகளாக அந்நிய நாட்டில் அரசர்களுக்கு அடிமைப் பட்டுக் கிடந்த மக்கள், தங்களைப் பாவத்திலிருந்தும், அடிமை வாழ்விலிருந்தும் மீட்கப்போகின்ற ஆண்டவரைப் பார்த்து, ஒலிவக் கிளைகளைக் கையிலேந்தி, தாவீதின் மகனே! ஆண்டவரே! எங்களை மீட்டருளும் (ஓசன்னா)! ஆண்டவரே வெற்றி தாரும்! என்று ஆரவாரம் முழங்க, வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேம் நுழைந்ததை இன்று நாம் கொண்டாடுகிறோம்.

இதையே கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அனைவரும் நண்பகல் வேளையில், ஒலிவ மலையில் கூடிச் செபித்த பிறகு, மாலையில் ஒலிவக் கிளைகளையும், வேறு சில மரங்களின் கிளைகளையும் கைகளில் ஏந்தி, பவனியாக எருசலேம் ஆலயத்திற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதுவே கி.பி. 8–ஆம் நூற்றாண்டிலிருந்து குருத்து ஞாயிறாக, குருத்தோலைகளையும், ஒலிவக் கிளைகளையும் புனிதப்படுத்தும் சடங்காக மாறியது.

இதோ அருள்பணியாளர், இயேசுவின் அரசாட்சியை வெளிப்படுத்தும் மன்னருக்குரிய சிவப்பு நிறத் திருவுடைகளை அணிந்துகொண்டு பீடச்சிறுவருடன் பவனி வருகிறார். இயேசுவின் எருசலேம் புனிதப் பயணத்திற்கு, நாற்பது நாள்களாக செபத்திலும், தவத்திலும், தானத்திலும் தயாரித்த நாம், நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் இயேசுவை வரவேற்ற மக்கள் கூட்டத்தோடு மனதளவில் இணைந்து,

குருத்தோலைகளைக் கையிலேந்தி, பக்தியுடன் இன்றைய திருவழிபாட்டில் பங்கேற்போம். தாவீதின் மகனுக்கு ஓசன்னா என்னும் பாடல் பாடலாம்.

### பல்லவி

தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்ட வர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவரே! இஸ்ரயேலின் அரசரே, உன்னதங்களிலே ஓசன்னா! உன்னதங்களிலே ஓசன்னா!

அருள்பணியாளர் இன்றைய திருச்சடங்கின் உட்பொருளை எடுத்துரைத்து, குருத்தோலைகளை மந்திரிக்கின்றார்.

தலைவர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

அருள்பணியாளர் / தலைவர் : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, தவக்காலத் தொடக்கத்திலிருந்தே, தவ முயற்சிகளாலும் பிறர் அன்புப் பணிகளாலும் நம் இதயங்களைத் தயாரித்தபின் இன்று நாம் ஒன்று கூடியுள்ளோம். இதனால் நம் ஆண்டவருடைய பாஸ்கா மறைநிகழ்வை, அதாவது ஆண்டவருடைய திருப்பாடுகளையும் உயிர்ப்பையும் உலகளாவிய திரு அவையோடு சேர்ந்து அறிவிக்கின்றோம். இப்பாஸ்கா மறைநிகழ்வை நிறைவேற்றவே அவர் தம் நகரான எருசலேமுக்குள் நுழைந்தார். எனவே மீட்பு அளிக்கும் இந்த நுழைவை நாம் முழு நம்பிக்கையுடனும் இறைப்பற்றுடனும் நினைவில் கொண்டு, ஆண்டவரைப் பின்செல்வோம். அவருடைய அருளினால் சிலுவையின் பங்கேற்பாளர்களாக மாறி, அவருடைய உயிர்ப்பிலும் வாழ்விலும் நாம் பங்குபெறுவோமாக.

சிற்றுரைக்குப் பின் அருள்பணியாளர் தம் கைகளை விரித்து, கீழ்வரும் மன்றாட்டைச் சொல்கின்றார்:

### மன்றாடுவோமாக

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,<br>
இக்குருத்தோலைகளை உமது ✠ ஆசியால் புனிதப்படுத்தியருளும்;<br>
அதனால் கிறிஸ்து அரசரை அக்களிப்புடன் பின்பற்றும் நாங்கள்<br>
அவர் வழியாக நிலையான எருசலேமுக்குள் வந்து சேர<br>
ஆற்றல் பெறுவோமாக.

என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக

உம்மை மன்றாடுகின்றோம்.

பதில் : ஆமென்.

### நற்செய்தி வாசகம் : மத்தேயு 21:1-11

*ஆண்டாண்டு காலமாக அரசர் வேண்டும் என்று காத்துக்கிடந்த மக்களுக்கு, ஆண்டவர் பெயரால் வருகின்றவரை வரவேற்பது ஒரு பெரிய மகிழ்ச்சி. கவலையும், கண்ணீரும் தீர்ந்து, மீட்பு கிடைக்கப் போகிறது என்ற பெருமிதம். சீயோன் மகளே! எருசலேம் மகளே! ஆர்ப்பரி! இதோ சாந்தமும், தாழ்ச்சியும் நிறைந்த உன் அரசர், அன்பையும், அமைதியையும் கொண்டுவர அமைதியின் சின்னம் பொதி மிருகக் குட்டியின் மேல் அமர்ந்து உன்னை தேடி வருகிறார் (செக் 9:9) என்னும் செக்கரியாவின் இறைவாக்கு நிறைவேறும் நேரம் இது. அமைதியின் அரசரை வரவேற்கும் மனநிலையில் நற்செய்தி வாசகத்தைக் கேட்போம்.*

### திருக்குழும மன்றாட்டு

தலைவர் : என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,

தாழ்மையின் எடுத்துக்காட்டை

மனித இனம் பின்பற்ற, எங்கள் மீட்பரை மனித உடல் எடுக்கவும்

சிலுவையை ஏற்றுக்கொள்ளவும் செய்தீரே;

அதனால் நாங்கள் அவரது பொறுமையைக் கற்றுக்கொண்டு

அவரது உயிர்ப்பில் பங்கேற்கத் தகுதி பெறுமாறு

எங்களுக்குக் கனிவாய் அருள்வீராக.

உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய்

என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக

உம்மை மன்றாடுகின்றோம்.

*அன்பார்ந்தவர்களே, இப்பொழுது திருப்பலி தொடர்கின்றது. பாடுகள் படுவதற்காகவே இயேசு எருசலேம் சென்றார். எனவே, இன்றைய திருப்பலிச் செபங்களும், பாடல்களும், வாசகங்களும், இயேசுவின் திருப்பாடுகளை நம் கண்முன் கொண்டு வருகின்றன. பக்தி உருக்கத்துடன் திருப்பலியில் பங்கேற்போம்.*

## இறைவாக்கு வழிபாடு

### முதல் வாசகம் : எசாயா 50:4-7

*என் உடலைத் துன்புறுத்தினார்கள், தாடியைப் பிய்த்தார்கள், காறி உமிழ்ந்தார்கள். நான் கலக்கம் கொள்ளவில்லை, வெட்கப்படவில்லை என்ற துன்புறும் ஊழியனின் தாழ்ச்சியையும், இறைத் திருவுளத்திற்குப் பணிந்து, நம் பாவம் போக்க, அவர் நொறுக்கப்பட்டதையும் சித்தரிக்கும் முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.*

### பதிலுரைப் பாடல்

**பல்லவி : என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?**

என்னைப் பார்ப்போர்எல்லாரும் ஏளனம் செய்கின்றனர்; உதட்டைப் பிதுக்கித் தலையசைத்து, 'ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தானே! அவர் இவனை மீட்கட்டும்; தாம் அன்பு கூர்ந்த இவனை அவர் விடுவிக்கட்டும்' என்கின்றனர்.

16 தீமை செய்வோரின் கூட்டம் என்னை வளைத்துக்கொண்டது; நாய்கள் என அவர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள்; என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்.

17a என் எலும்புகளை எல்லாம் நான் எண்ணிவிடலாம். **பல்லவி**

18 என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக்கொள்கின்றனர்; என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர்.

19 நீரோ ஆண்டவரே! என்னை விட்டுத் தொலையில் போய் விடாதேயும்; என் வலிமையே! எனக்குத் துணை செய்ய விரைந்து வாரும். **பல்லவி**

22 உமது பெயரை என் சகோதரருக்கு அறிவிப்பேன்; சபை நடுவே உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.

23 ஆண்டவருக்கு அஞ்சுவோரே, அவரைப் புகழுங்கள்; யாக்கோபின் மரபினரே, அனைவரும் அவரை மாட்சிப்படுத்துங்கள்; இஸ்ரயேல் மரபினரே, அனைவரும் அவரைப் பணியுங்கள். **பல்லவி**

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2:6-11

*தந்தையின் திட்டத்திற்கு தம்மையே முற்றிலும் கையளித்து, தரணியை மீட்டவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. தாழ்ச்சியால் மாட்சிக்கு உயர்த்தப்பட்ட இவரது கீழ்ப்படிதல், உலக மக்கள் அனைவருக்கும் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நமது இல்லங்களிலும், நிறுவனங்களிலும் உண்மையான கீழ்ப்படிதல் உயர்வுக்கு வழிவகுக்கும் என்ற எண்ணத்தோடு, இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.*

## இரண்டாம் வாசகத்துக்குப் பின் வரும் ஆர்ப்பரிப்பு

கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

## ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள்

*ஆண்டவருடைய திருப்பாடுகளின் வரலாறு, எரியும் திரிகளும் தூபமும் இன்றி, வாழ்த்துரை கூறாமலும் திருநூலில் சிலுவை அடையாளம் வரையாமலும் வாசிக்கப்படும். "இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார்" என வாசிக்கும்போது அனைவரையும் முழந்தாளிடச் சொல்லவும்.*

## நற்செய்தி வாசகம் : 26:14-27:66

## நம்பிக்கை அறிக்கை

தலைவர் : நாம் அனைவரும் சேர்ந்து நமது நம்பிக்கையை அறிக்கையிடுவோம்.

எல் : ஒரே கடவுளை நம்புகின்றேன். . .

விண்ணகமும் மண்ணகமும், காண்பவை காணாதவை யாவும் படைத்த
எல்லாம் வல்ல தந்தை அவரே.
கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஒரே ஆண்டவர்
இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.
இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார்.
கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக,

உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர்.

இவர் உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர்.

தந்தையோடு ஒரே பொருளானவர்.

இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.

மனிதர் நமக்காகவும் நம் மீட்புக்காகவும்

விண்ணகம் இருந்து இறங்கினார்.

("... மனிதர் ஆனார்" எனச் சொல்லும்வரை எல்லாரும் தலை வணங்கவும்).

தூய ஆவியால் கன்னி மரியாவிடம்

உடல் எடுத்து மனிதர் ஆனார்.

மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில்

சிலுவையில் அறையப்பட்டுப்

பாடுபட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார்.

மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

விண்ணகத்துக்கு எழுந்தருளி,

எல்லாம் வல்ல தந்தையின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றார்.

வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட

மாட்சியுடன் மீண்டும் வர இருக்கின்றார்.

அவரது ஆட்சிக்கு முடிவு இராது.

தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும்

ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகின்றேன்.

இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக

ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்.

இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.

ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும்

திரு அவையை நம்புகின்றேன்.

பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன்.

இறந்தோரின் உயிர்ப்பையும்

வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

தலைவர் : அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, 'கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்' என்று கூறிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் உண்மையானவை. தம் திருமகனின் வார்த்தைக்கு ஏற்ப நேரிய உள்ளத்தோடு தந்தையைத் தேடிவரும் யாவரையும் தந்தையாம் கடவுள் கனிவோடு ஏற்றுக்கொள்கின்றார்; அவர்கள் நம்பிக்கையுடன் கேட்பதையெல்லாம் அருள்கின்றார். எனவே, இப்பொழுது நாம் இறைவன்மீது பற்றுறுதி கொண்டு, நம் மன்றாட்டுகளை எழுப்புவோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

### 1. அருள்பொழிவு செய்து அரவணைக்கும் இறைவா,

உம் திருமகன் கிறிஸ்துவின் உன்னத பணியை ஒவ்வொரு நாளும் உவப்புடன் ஆற்ற, உம்மால் அருள்பொழிவு செய்யப்பட்டுள்ள எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் நீர் நிறைவாக ஆசியளித்து குறிப்பாக கொரோனாத் தொற்றுநோய் நெருக்கடியில் அவர்கள் எடுத்துவரும் ஒவ்வொரு பாதுகாப்பு, தற்காப்புப் பணியிலும் அவர்களோடு கூட இருந்து காத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 2. தாயினும் மேலாய் தயவுடன் காக்கும் தந்தையே இறைவா,

எம் தாய்நாட்டுப் பணிகளில் தலைமைப் பொறுப்பேற்று ஆட்சிபுரியும் அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் உமது பேரருளை அளித்து, அவர்கள் நாட்டு மக்கள் நலன்கருதி கொரோனாத் தொற்றுநோய் பரவாமல் இருக்க எடுக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் நாட்டு மக்கள் ஒத்துழைத்து நோயிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 3. பகிர்ந்து வாழத் தூண்டும் பரம்பொருளே இறைவா,

பெற்றதைப் பகிர்வது நற்குணங்களில் முதன்மையானது என்பதை நினைவு கூர்ந்து, எமது பொருள்கள், திறமைகள், ஆலோசனைகளைப் பிறருடன் பகிர்ந்து வாழவும், அதன் வழியாக எம் பகுதியில் பசி, பிணி போன்ற துன்பங்களிலிருந்து மக்கள் விடுபட்டு நலமான வாழ்வு வாழவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 4. நிறைவாழ்வின் நெஞ்சத் தேடலே இறைவா,

உம் திருமகனது உயிர்ப்புப் பெருவிழாவை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கும் நாங்கள், எங்களது அன்றாடப் பணிகளுக்கிடையே, நிறைவாழ்வின் ஊற்றான உம்மைத் தேடும் விதத்தில் தானம், தர்மம், நோன்பு, தியானம் போன்ற செயல்பாடுகளை விரும்பி நிறைவேற்றி வெற்றி காண வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

தலைவர் : நம்முடைய தனிப்பட்ட தேவைகளுக்காக அமைதியாக வேண்டுவோம் (அமைதி)

தலைவர் : மன்றாடுவோமாக : இரக்கம் நிறைந்த இறைவா, உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் உம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு எழுப்பியுள்ள இந்த வேண்டுதல்களுக்கு கனிவுடன் செவிசாய்த்தருளும். எங்களை எந்நாளும் காத்து வழிநடத்தி வருகின்ற எம் தந்தையே, உமது வள்ளன்மையால் நாங்கள் உம் அருள்வரங்களை நிறைவாகப் பெற்று மகிழ்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

பாடல் : (பொருத்தமான காணிக்கைப் பாடல் பாடலாம்).

## காணிக்கைப் பாடல்

எதை நான் தருவேன் இறைவா – உன்
இதயத்தின் அன்பிற்கீடாக

குறைநான் செய்தேன் இறைவா – பாவக்
குழியில் விழுந்தேன் இறைவா (2)
கறையாம் பாவத்தை நீக்கிடவே – 2
நீ கல்வாரி மலையில் இறந்தாயோ

பாவம் என்றொரு விசத்தால் – நான்
பாதகம் செய்தேன் இறைவா – 2
தேவனே உம் திருப்பாடுகளால் – 2 எனைத்
தேற்றிடவே நீ இறந்தாயோ

## போற்றிப் புகழ்தல்

தலைவர் : அனைத்தையும் படைத்துப் பராமரித்துப் பாதுகாத்து வரும் தந்தையே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கிறோம்; உமக்கு நன்றி கூறுகிறோம்.

தலைவர் : கன்னி மரியாவிடமிருந்து பிறந்து எங்கள் பாவங்களுக்காகச் சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : எம் நடுவில் எழுந்தருளி, எங்களைப் புனிதப்படுத்தி வழிநடத்துகின்ற தூய ஆவியாரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : எங்கள் துன்ப வேளையிலே எங்களோடு இருந்து, துயர் துடைத்து ஆறுதல் அளிக்கின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : நாங்கள் நோயுறும்போது நலம்தரும் நாயகனாக வந்து எங்களைச் சந்தித்து, குணமாக்குகின்ற ஆண்டவரே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : என்றும் எங்களோடு தங்கி, எங்களைப் பலப்படுத்தி, உமது வல்லமையாலும் ஆற்றலாலும் நிரப்பிக் காத்து வருகின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : மூவொரு இறைவா, விண்ணகமும் மண்ணகமும் உம்மைப் பணிந்து வணங்கி உமது வல்ல செயல்களைப் புகழ்கின்றன; நாங்களும் வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து முடிவின்றிப் பறைசாற்றிச் சொல்வதாவது:

எல் : தூயவர், தூயவர். . . . .

## பலியின் நினைவு

தலைவர் : நம்முடைய மீட்புக்காகத் தம்மையே கல்வாரியில் பலியாக்கினார் கிறிஸ்து. அப்பலியை நாம் இப்போது நினைவுகூர்வோம். அருளடையாள முறையில் தொடர்ந்து நமக்காகப் பலியாகும் கிறிஸ்துவோடு, நம்மையும், நம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் இணைத்துக் கொள்வோம்.

எல் : எங்களுக்காகப் பலியாகும் அன்பு இயேசுவே / உம்மை ஆராதித்துப் போற்றிப் புகழ்கின்றோம். / அன்று கல்வாரியில் பலியான நீர், / இன்று திருப்பலிக் கொண்டாட்டங்களில், / எங்களுக்காக மீண்டும் மீண்டும் பலியாகின்றீர். / வாழ்வளிக்கும் உணவாக உம்மையே எங்களுக்கு அளிக்கின்றீர். / இன்று உம் பலியை / நாங்கள் அருளடையாள முறையில் கொண்டாட இயலாவிடினும் / உமது கல்வாரிப் பலியை நினைவுகூர்கின்றோம்; / அந்தப் பலியோடு எங்களையே இணைத்துக் கொள்கிறோம். எங்கள் இன்பம், துன்பம், / ஏற்றம், ஏமாற்றம், / சிக்கல்கள், பிரச்சினைகள், / வேலைகள், திட்டங்கள் அனைத்தையும், / எங்கள் வாழ்வு முழுவதையும் / உமக்கு உகந்த பலியாக அர்ப்பணிக்கின்றோம். / எங்கள் எளிய காணிக்கையை ஏற்றுக்கொண்டு / எங்களை ஆசீர்வதியும். / எம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் / நீர் புனிதப்படுத்தியருளும். / நாங்கள் எங்களையே மறுத்து, / தியாக உணர்வோடு உம்மைப் பின்பற்றச் செய்வீராக. / எம் சகோதர சகோதரிகளில் உம்மைக் காணவும், அவர்களை முழு உள்ளத்தோடு ஏற்று அன்பு செய்யவும் / தாராள உள்ளத்தோடு அனைவர்க்கும் பணிபுரியவும் / வரமருள்வீராக. / ஆமென்.

## திருவுணவின் நினைவு

தலைவர் : கடவுளை நம் தந்தையென அழைக்க இயேசு நமக்குக் கற்பித்தார். எனவே, நம் தந்தையாகிய இறைவனைப் போற்றவும், இறையாட்சி இவ்வுலகில் வளரவும் இயேசு கற்றுத்தந்த மன்றாட்டைச் சொல்வோம்.

எல் : விண்ணுலகில் இருக்கிற. . . . . (பாடலாம்)

தலைவர் : இவ்வழிபாட்டில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும், அன்பிலும் நட்புறவிலும் ஒவ்வொரு நாளும் வளரவேண்டுமென்று இயேசு நம்மை அழைக்கிறார். அவரே நம்மிடையே காணப்படும் பிளவுகளை அகற்றி, நம்மை அன்பின் குடும்பமாக உருவாக்குகிறார். எனவே, நாம் அன்புறவில் நிலைத்து வாழ்வோம் என்பதன் அடையாளமாக, ஒருவருக்கொருவர் அமைதியை அறிவித்துக்கொள்வோம்.

## அமைதியை அறிவித்தல்

எல் : உலகின் பாவங்களைப் போக்கும். . .

தலைவர் : இப்போது, ஆண்டவர் இயேசு நம் உள்ளத்தில் எழுந்தருளிவர, அனைவரும் சேர்ந்து மன்றாடுவோம்.

எல் : "ஆண்டவரே, / நீர் என் இல்லத்தில் எழுந்தருள / நான் தகுதியற்றவன். / ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்" / என்று நூற்றுவர் தலைவர் செபித்ததுபோல, / நாங்களும் இப்போது / உம் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறோம். / இனிய இயேசுவே! / நாங்கள் தகுதியற்றவர்களாய் இருந்தாலும், / எங்கள் தகுதியின்மையைப் பாராமல் / நீர் எங்கள் உள்ளங்களில் எழுந்து வாரும். / உம் அன்பிலும் அருளிலும் நாங்கள் நிலைத்திருக்க / எம்முள் எழுந்துவாரும். / உம் பிள்ளைகளாக, / உயிருள்ள உண்மைச் சாட்சிகளாக, / உமது நற்செய்தியின்படி வாழ்பவர்களாக / எங்களை உருமாற்ற வாரும். / தந்தையின் திருவுளப்படி வாழ்ந்திட / எங்களுக்குத் துணைபுரிந்திட வாரும். / நன்மை செய்வதில் ஆர்வமுள்ளவர்களாய், / தீமைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களாய் வாழவும் / எங்களை வழிநடத்த வாரும். / எல்லா நலன்களாலும் வளங்களாலும் எங்களை நிரப்ப வாரும் / – ஆமென்.

## சிறிது நேரம் அனைவரும் அமைதியாக மன்றாடுதல்

பாடல் : ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் (திபா 118) (அல்லது)

## திருவிருந்துப் பாடல்

உன்னில் நான் ஒன்றாக உயிரே நீ என்றாக
என்னில் வா என் மன்னவா – 3

நினைவாக சொல்லாக செயலாக எனில் வாழும்
துணையாளன் நீயல்லவா – 2
எனை நாளும் பிரியாமல் உயிரோடு உயிராக
இணைகின்ற என் மன்னவா – 2 இணைகின்ற என் மன்னவா

நிலம் வாழ நீராகி மலர் வாழ ஒளியாகி
நலம் சேர்க்கும் என் மன்னவா – 2 என்
உளமென்னும் மலர் வாழ அன்பென்னும் மணம் நல்கும்
இளந்தென்றல் நீயல்லவா – 2 இளந்தென்றல் நீயல்லவா

## இறுதி மன்றாட்டு

தலைவர் : மன்றாடுவோமாக : ஆண்டவரே, உம்முடைய இந்தக் குடும்பத்துக்காக எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து துன்புறுத்துவோருக்குத் தம்மைக் கையளிக்கவும் சிலுவையின் கொடுமையைத் தாங்கிக்கொள்ளவும் தயங்கவில்லை; நீர் இக்குடும்பத்தைக் கண்ணோக்கி அருள்புரிவீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

எல் : ஆமென்.

## கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடியில் அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

தலைவர் : ஓ அன்னை மரியே!

எல் : நீர் எப்போதும் எங்கள் பாதையில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக ஒளிர்கின்றீர். சிலுவை அடியில் நின்று இயேசு பட்ட பாடுகளில் பங்கெடுத்து, உமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தீர். நோயாளிகளின் ஆரோக்கியமே! எங்களை உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறோம்.

அனைத்துலக மக்களின் மீட்புக்குத் துணை நிற்கும் நீர், எங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து வழங்குவீர் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆகவே, கலிலேயாவின் கானாவில் நடந்ததுபோல இந்த சோதனைக் காலத்திற்குப் பின் நாங்கள் எங்கள் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் மீண்டும் திரும்புவோம் என நம்புகிறோம்.

எங்கள் துன்பங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, துயரங்களைச் சுமந்து கொண்டு, சிலுவை வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு எங்களை வழிநடத்திய இயேசு கூறியபடி, தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கி வாழ்வதற்கு இறையன்பின் தாயே எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

ஓ இறைவனின் புனித அன்னையே, உமது பாதுகாப்பின்கீழ் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம். மாட்சிக்குரிய புனித கன்னியே, சோதனைக்கு உட்பட்டிருக்கும் எங்கள் விண்ணப்பங்களைப் புறக்கணியாமல் எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களை விடுவித்தருளும்.

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

**ஆசியுரை**

தலைவர் : நன்மையே உருவான இறைவன் நமக்குத் தம் அருளை அளித்து, ஆசீரைப் பொழிந்து, எல்லாத் தீமைகளினின்றும் நம்மைக் காத்தருள்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : நம் புகலிடமாகிய இறைவன் நம் நம்பிக்கையை வளர்த்து, எதிர்நோக்கை உறுதிப்படுத்தி, நாம் இறுதிவரை அன்பிலும் அமைதியிலும் நிலைத்திருக்கச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : கருணை மிகுந்த கடவுள் நம்மை இரக்கத்துடன் கண்ணோக்கி, நம் திட்டங்களும் முயற்சிகளும் விருப்பங்களும் நிறைவேறச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : இறையன்பிலும் பிறரன்பிலும் வாழ்ந்து சான்றுபகரச் சென்று வருவோம்.

எல் : இறைவா உமக்கு நன்றி!

**பாடல் : நன்றிப் பாடல்**